**15. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் அடுத்தக்கட்ட பொருளாதார வளர்ச்சிக்கு நகர்ப்புற மேம்பாட்டு நிதி இன்றியமையா பங்காற்றும் என்று பிரதமர்
திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதும் பொது விநியோக துறையில் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படுவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. கடலூர் மாவட்டம் வடலூரில் வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும் என முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. மஹா சிவராத்திரியை ஒட்டி சிவாலயங்களில் இன்று மாலை முதல் நான்குகால பூஜைகள் நடைபெறுகின்றன.

5. ஐ.சி.சி உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் கொழும்புவில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நகரங்கள் முக்கிய பங்காற்றுவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை

மத்திய அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உயர்த்தர நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒருலட்சம் கோடி ரூபாய் சந்தை நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதை சுட்டிக்காட்டிய அவர், இதன்மூலம் குடிமக்கள் சார்ந்த சீர்த்திருத்தங்களடன் கூடிய உயர்தர உள்கட்டமைப்பு வசதிகள் எளிமைப்படுத்தப்படும் என்றார்.

மேலும் பருவநிலை சவால்களுக்கு உகந்த ஒருங்கிணைந்த மீட்சிமை மிக்க நகரங்களை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், நாட்டின் அடுத்தக்கட்ட பொருளாதார வளர்ச்சிக்கு நகர்ப்புற மேம்பாட்டு நிதி இன்றியமையா பங்காற்றும் என நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற வளர்ச்சிக்கு 4 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டிற்கு இது வழிவகுப்பதுடன் மானியத்துடன் கூடிய நிதியுதவியிலிருந்து புரட்சிக்கரமான சந்தை நிலவரம் சார்ந்த உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு இது வழிகோலும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் – மாநாடு

முதலாவது இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சிமாநாட்டை பிரதமர் திரு. நரேந்திரமோடி, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் இணைந்து புதுதில்லியில் நாளை தொடங்கி வைக்கிறார்.

வரும் 20-ம் தேதிவரை நடைபெறும் இம்மாநாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், மனிதகுல மேம்பாட்டிற்கான செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டவைகள் குறித்த விவாதங்கள் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

நிறுவன நாள்

இந்திய ராணுவத்தின் தகவல் படைப்பிரிவின் 116-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

சவாலான பருவநிலை காலங்கள், மிக உயர்ந்த மலை முகடுகள் உள்ளிட்ட இடங்களில் எதிரிகளின் ஊடுருவலை தகர்த்துவதற்கான உரிய தகவல்களை அளித்து நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இப்படைப்பிரிவினரின் பங்கு அளப்பரியது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகளின் போது இப்படைப்பிரிவினரின் வேகம், ஆற்றல், தகவல் பரிமாற்றம் உள்ளிட்டவை பெரும் பங்காற்றியதாக இதன் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜென்ரல் விவேக் டோக்ரா தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் சைபர் அச்சுறுத்தல்கள், மின்னணு போர் மற்றும் உடல் ரீதியான இடையூறுகளுக்கு இடையே இப்படையினர் சிறப்பாக செயலாற்றி வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

உலகளாவிய டிஜிட்டல் பரிவர்தனைகளில் 50 சதவிகிதம் இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் காந்தி நகரில் மின்னணு அடிப்படையிலான பொதுவிநியோக செயல்பாடுகளை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், இதன்மூலம் பொது விநியோக துறையில் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படுவதாக கூறினார்.

காந்தி நகரில் இன்று தொடங்கப்பட்ட இத்திட்டம் படிப்படியாக நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் குறைந்தபட்ச அரசு அதிகபட்ச நிர்வாகம் என்ற தாரக மந்திரத்துடன் உணவு வழங்கல் அமைச்சகத்தின் வெளிப்படையான நடவடிக்கைகளை உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் இந்நாடுகளுக்கு இடையேயான இணைப்பை உறுதிசெய்து வர்த்தக சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளை மேம்படுத்தும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியில் நடைபெறும் முனீச் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், சர்வதேச சவால்களை எதிர்கொள்வதில், ஐரோப்பிய நாடுகளின் சீர்த்திருத்தங்கள், புவிசார் அரசியலின் திறன் அம்சமாக விளங்குவதாக கூறினார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் நாட்டு தலைவர்களுடன் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் இன்று முக்கிய ஆலோசனைகளையும் மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் நான்காயிரத்து 192 திருக்கோவில்கள் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப் பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அனைத்துலக வள்ளலார் மாநாட்டை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், 19 திருக்கோவில்களில் முதலுதவி மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மேலும் 12 கோவில்களில் அன்னதாக திட்டங்கள் விரிவாக்கப் பட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர் இதுவரை 8 ஆயரத்து 423 கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டம் வடலூரில் வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம், அன்னதான கூடங்கள், ஆய்வுக்கூடம், சன்மார்க்க பயிற்சி பள்ளி அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட 7 அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

சிறப்பான மக்கள் சேவையாற்றியவர்களுக்கு விருதுகளை வழங்கிய முதலமைச்சர் வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் புத்தக கண்காட்சி, மூலிகை கண்காட்சி, சித்த மருத்துவ முகாம் ஆகியவற்றையும் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து சென்னை மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மஹா சிவராத்திரி

மஹா சிவராத்திரி நாடுமுழுவதும் இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

மாநிலத்தின் அனைத்து சிவாலயங்களிலும் இன்று நான்குகால பூஜைகளுடன் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

சிதம்பரம் அருள்மிகு நடராஜர், காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர், திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி, திருவாணைக்காவல் ஜம்புகேஸ்வரர் உள்ளிட்ட பல்வேறு சிவாலயங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

மஹா சிவராத்திரியை ஒட்டி தஞ்சை பெரிய கோவிலில் திருமுறை விண்ணப்பம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நான்குகால பூஜைகள் நடைபெறவுள்ளன.

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி திருக்கோவிலில் ஏராளமான சிவனடியார்கள் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக கன்னியாகுமரி மாவட்டம் திருமலை மஹாதேவர் திருக்கோவிலில் நேற்று தொடங்கிய பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டம் திருநட்டாலம் சங்கரநாராயண சிவாலயத்தில் நாளை அதிகாலை நிறைவடைகிறது.

இந்நாளையொட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் சிவபெருமானின் அருளால் மகிழ்ச்சியான வாழ்வுடன் நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென வாழ்த்தியுள்ளார்.

காசி முதல் ராமேஸ்வரம் வரை கொண்டாடப்படும் இப்பண்டிகை நாட்டின் ஆன்மீக வழித்தடத்தை உயிரூட்டத்துடன் கொண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் கூறியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் நாட்டின் வளர்ச்சிக்கு சிவனருள் கிடைக்கட்டும் என கூறியுள்ளார்.

மஹா சிவராத்திரியை ஒட்டி கோவை ஈஷா மையத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் மத்திய பாதுகாப்புத்துறை

அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழகத்தில் மகளிர் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்கீழ் ஒருகோடியே 31 லட்சம் பேர் பயனடைந்து வருவதாக கூறினார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சமமான வளர்ச்சி என்ற நோக்கில் அரசு செயல்படுவதாக கூறிய துணை முதலமைச்சர்,
10 லட்சம் மாணாக்கருக்கு இலவச மடிக்கணினி உள்ளிட்ட அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பட்டியலிட்டார்.

முன்னதாக பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழகத்தில் மருத்துவமனைகளில் உரிய அங்கீகாரம் இல்லாமல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என

மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் எச்சரித்துள்ளார்.

கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 5 புதிய மருத்துவ கட்டடங்கள் மற்றும் உயர்நிலை மருத்துவ கருவி பயன்பாட்டை தொடங்கிவைத்த அவர், இப்பகுதியில் கழிவுநீர் தேங்காத வகையில் 9 கோடி ரூபாய் மதிப்பில் உள்கட்டமைப்பு மற்றும் சாலை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆய்வு

தமிழ்நாட்டில் ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதிநாளாக கொண்ட சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பான இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23-ம் தேதி வெளியிடப்படும் என தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தமிழகம், கேரளா, உள்ளிட்ட 5 மாநிலங்களில் தலைமை தேர்தல் ஆணையர் திரு.கியானேஸ்குமார் தலைமையிலான குழு நாளைமுதல் ஆய்வுப் பணிகளை தொடங்கவுள்ளது.

இப்பயணத்தின் போது அரசியல் கட்சி தலைவர்கள் தலைமை தேர்தல் அதிகாரிகள் உள்ளிட்டோருடன் இக்குழுவினர் ஆலோசனைகள் மேற்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் இன்று நடைபெற்ற ஆரோக்கிய இந்தியா மாரத்தான் போட்டிகளை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தொடங்கிவைத்தார்.

இதில் ஆயிரக்கணக்கான மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் சமூக பொறுப்பு நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் பூங்கா மற்றும் மாநகராட்சி சார்பில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத், இன்று ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தேனி வாய்ஸ்

தேனி மாவட்டம் சின்னமனூரில் முல்லை பெரியாறு அணையை கட்டிய கர்னல் ஜான் பென்னி குயிக்கின் பிறந்தநாளை ஒட்டி ரேக்ளா பந்தயம் இன்று நடைபெற்றது.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் கொழும்புவில் இந்தியா இன்றிரவு 7 மணிக்கு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

மும்பையில் நேபாளத்திற்கு எதிராக 134 ரன் என்ற வெற்றி இலக்குடன் தற்போது விளையாடி வரும் வெஸ்ட் இண்டீஸ் சற்றுமுன் 15 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 122 ரன் எடுத்திருந்தது.

சென்னையில் பிற்பகல் 3 மணிக்கு அமெரிக்கா – நமீபியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖